1972 மார்ச் 1]

அக்காமலே புல்வெளியில் கால்நடைப் பண்ணே

* 265 வினு—திரு. இ. ராமசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

வால்பாறையைச் சேர்ந்த அக்காமலே புல்வெளியில் கால்நடைப் பண்ணே ஒன்று அமைக்க திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனேயிலுள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அந்தத் திட்டம் பரிசீலனேயில் இல்லே.

திரு. இ. ராமசாமி : தலைவரவர்களே, 1½ ஆண்டுகளுக்கு முன்பே சம்பந்தப்பட்ட அதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் வந்து அந்த இடத்தைப் பார்த்து விட்டுச் சென்ருர்கள். 50 ஆயிரம் ஏக்கர் புல்வெளி இருப்பதாகவும், மாடு வளர்ப்பதற்கு வசதி இருக்கிறது என்றும் சொன்னர்கள். வெளிநாட்டினர் உதவியுடன் அந்த இடத்தில் ஒரு கோடி ரூபாய் செலவில் கால் நடைப்பண்ணே ஆரம்பிக்க இருப்பதாக ஒரு திட்டம் இருந்ததே, அது இப்போது எந்த நிலேயில் இருக்கிறது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அந்த இடமும், பல்வேறு இடங்களும் ஒவ்வொரு இடமாகப் பரிசீலனேக் குள்ளானது. பல்வேறு இடங்களிலும், எந்த இடத்தில் முதலீடு செய்தால் என்ன செலவாகும், அங்கேயுள்ள தட்ப வெட்பநிலே கால்நடை வளர்ச்சிக்கு மிகப் பொருத்தமாக இருக்குமா என்றும் ஆராயப்பட்டு வருகிறது. அதற்கான முடிவை வெளி நாட்டினரின் தொடர்போடு எடுக்கவேண்டியிருப்பதால், அது இன்னும் ஆரம்பிக்கப்படவில்லே.

வேலூரில் அரசு அச்சகம்

* 266 வினு—திரு. மா. பா. சாரதி: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

வேலூரில் ஒரு அரசு அச்சகம் (Government Press அமைக்கும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : வேலூரில் ஓர் அரசு அச்சகம் நிறுவும் செயற்குறிப்பு தற்போதைக்கு அரசிடம் இல்லே.